ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 21-9-2015 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

88. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (6) துறையின் 29-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 18-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

89. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து (i) உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (6) துறையின் 29-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 19 (ii) உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (6) துறையின் 16-12-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 75 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

90. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

91. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

92. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

349. மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

350. மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

351. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2015-2016. (தமிழ்)

352. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2015-2016. (தமிழ்)

***